மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**THE BIBLE READING COMPANION**

Follow the tables to read the Old Testament 1 time and the New Testament 2 times every year

Includes Lists of References :

(A) Old - New Testament
(B) New - Old Testament

Presented free by
The Christadelphians
(Brothers and Sisters in Christ)

GPO Box 4237
Bangalore.

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 18

★ ஒரு உதவும் கரம்

★ வாழ்க்கை மற்றும் மரணம் பற்றி வேதாகமப் போதனை

★ இப்பொழுதே செய்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : பதிப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# ஒரு உதவும் கரம்

நீ கீழே விழுந்துவிட்ட நேரம், உன்னைத் தூக்கி நிறுத்த ஒரு உதவும் கரம் நீட்டப்பட்டால் அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வாயல்லவா? அல்லது உன் முன் ஒரு பெரிய தடை இருக்கும்போது, உனக்கு உதவி செய்ய ஒருவர் முன்வந்தால், அது எவ்வளவு நன்றாயிருக்கும். ஆபத்தான இடங்களில் இத்தகைய உதவி ஜீவனுக்கும் மரணத்துக்கும் இடையில் வந்து காப்பாற்றுகிறது.

## ஆபத்தான வேளைகள்:

நாம் வாழும் இக்காலகட்டத்தில் யாருக்கும், உலகின் எந்தமூலையிலும், எதுவும் தவறாகப் போகலாம். நம் சமுதாயம் பலதரப்பட்ட மக்களால் எந்த அளவுக்குச் சிக்கல் உள்ளதாய் இருக்கிறதோ, அந்த அளவிற்குப் பேரபாயம் வரக்கூடிய தருணங்களும் அதிகமாகும். அவைகளைச் சரிசெய்வதும் அதிகக் கடினமானதாகும்.




எடுத்துக்காட்டாக உலகம் வெப்பம்டைதல் என்ற இன்றைய பிரச்சனையைப் பார்ப்போம். அறிவியலறிஞர்களின் கூற்றுசரிஎனில், அது சரிதான் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேதைகளும் உலகளாவிய அபாயம் ஒன்றை எதிர்நோக்கியிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் கொள்கைகளை உருவாக்குவதிலும் சிக்கல்களைச் சந்திக்கிறார்கள்.

எல்லாருமே ஒரு மேம்பட்ட பொருளாதாரத்தை விரும்புகிறார்கள். இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகளில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எடுக்கும் முயற்சிகளை நாம் புரிந்து கொள்ளுகிறோம். இந்நாடுகளின் தொழில் முன்னேற்றமும் நுகர் பொருட்களை அதிகமாக நுகர்தலும் ஏற்கனவே மோசமாயிருக்கும் உலகின் சூழலை இன்னும் மோசமாகக் கூடும்.

சில ஆண்டுகளுக்குமுன், ஐக்கிய நாடுகளின் சபைத் தலைவர் கோஃபி அன்னன், கடல் மட்டம் உயருமானால, உலகிலேயே மிகப் பரந்த டெல்டாவை உள்ளடக்கிய வங்காள தேசம் காணப்படாமற்போகும் என்றார். இப்பொழுது துருவப்

பிரதேசங்களிலுள்ள எச்சரிப்பு விடுக்கக் கூடிய அளவில் பனிமுகடுகள் உருகி வழிகின்றன. கடல் மட்டம் உயருமென்ற பயம் இன்னும் அதிகரிக்கிறது.

### உதவும் கரம் யார்?

மனித செயல்பாடுகள் இன்றைய ஆபத்தை விளைவிக்கின்றன வேளையில் நாம் என்ன செய்யக் கூடும்? டிசம்பர் 2005ல் 33 நாடுகளிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நகரங்களிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் உலகம் வெப்பமடைதலைத் தடைசெய்ய அரசுகள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென தெருக்களில் வந்து குரலெழுப்பினர்.

உயிர்கொல்லிப் புயல்கள், பரவி வரும் நோய், உயர்ந்துவரும் கடல் மட்டங்கள், அழிந்து வரும் காடுகள் மற்றும் வனவிலங்குகள், தண்ணீர் தட்டுப்பாடு வேளாண்மைப் பிரச்சினைகள் பற்றி அவர்கள் எச்சரித்து வந்தனர். சுருங்கச் சொல்லின் மனிதகுலம் பூமியை அழித்துக்கொண்டிருக்கிறது என்றார்கள். ஆனால் அது குறித்து நாம் என்ன செய்யக்கூடும்?

நம் வீடுகளைப் பாதுகாப்பது, மின் கருவிகளை அணைத்து விடுவது, கழிவுகளை மறுசுழற்சி செய்வது போன்றவற்றைக் காட்டிலும் அதிக பலனளிக்கக் கூடியது ஒன்றுண்டு. உதவிக்காக நாம் தேவனை நாடலாம். நாம் அதையே செய்ய வேண்டுமென்று அவர் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

ஒரு சமயம் இஸ்ரேல் தொடர்ச்சியாகப் பேரழிவுகளால் தாக்கப்பட்டு வந்தது. வெட்டுக்கிளிகள் நாட்டை வெறுமையாக்கின இராணுவங்கள் பாழாக்கின. உணவுமில்லை, சுதந்திரமுமில்லை. ஆகவே யோவேல் கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

*“இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களை யல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்ரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபபடு கிறவருமாயிருக்கிறார்.” (யோவேல் 2:12,13.)*

### தேவன் நம்மை நாடி வருகிறார்

தேவன் எப்போதும் நம் பதிலுக்காகக் காத்துக்கொண்டேயிருக்கிறார். உதவி செய்யும், துணையாயிருக்க ஆயத்தமாயிருக்கவும் விரும்புகிறார். 2000 ஆண்டுகள் தங்கள் நாட்டை விட்டுத் தூரமாயிருந்தாலும், அவர்கள் உதவிகேட்கும்படி காத்திருந்த அவர்கள் தேவனால், ஆச்சரியமான விதமாக இஸ்ரவேல் மக்கள் தங்கள் நாடு திரும்ப உதவினார். அவர்கள் தேவனின் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியினரானதால், அவர்களை மீட்க அவர் எப்போதும் விருப்பமுள்ளவராயிருந்தார்.



*“என் தாசனாகிய இஸ்ரவேலை, நான் தெரிந்து கொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே, நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்து வந்து... நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை. நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பலப்படுத்தி உன்கபுச் சகாயம் பண்ணுவேன், என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்” (ஏசாயா 41:810).*

அதேபோல தேவன் பூமியைக் காப்பாற்றக் காத்துக்கொண்டிருக்கிறார். மக்கள் அவரிடம் சென்று அவர் உதவியை நாடவேண்டுமென்று விரும்புகிறார். மக்கள் கேட்கிறார்களோ இல்லையோ சீக்கிரத்தில் அவர் வரப்போகும் அழிவினின்று உலகைக் காப்பாற்ற இடைபடப் போகிறார். தாங்கள் மீட்கப்படவேண்டும் என்ற விருப்பம் உடையவர்களை மீட்கவும், பூமியை முழுமையான ஆரோக்கிய நிலைக்கு மீண்டும் கொண்டு வரவும் தேவன் நினைத்துள்ளார். தேவனால் மீட்கப்படும் அந்த மக்கள் கூட்டத்தில் நீ இருக்க விரும்பினால், இதோ, இங்கே ஒரு உதவும் கரம் உனக்காக.

### நிறைய வாசியுங்கள்

தேவனைப் பற்றியும் அவருடைய கிருபையுள்ள நோக்கத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள வேதாகமத்தை வாசியுங்கள். வரப்போகும் உலகப் போழிவிலிருந்து உனக்கும் உன்குடும்பத்திற்கும் பாதுகாப்பு வேண்டுமாயின, அவ்வழிவைத் தவிர்க்க வேண்டுமாயின் இதைவிடவும் சிறப்பாக வேறெதையும் நீ செய்யமுடியாது. அதிகாரத்தில் நீடிப்பதற்கும் அனைவரையும் மகிழ்ச்சியாக வைப்பதற்குமே அரசாங்கங்கள் கவனம் செலுத்துகின்றன ஏற்ற நேரத்தில் சரியானதொரு முடிவு எடுப்பதற்கு செயலாற்றமாட்டார்கள். அவர்கள் பேசலாம், ஆனால் செயலாற்ற மாட்டார்கள்.

வெகு காலத்திற்கு முன்பே, தேவனிடம் தெளிவான செயல்திட்டம் இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் உனக்கென சிலநிமிடங்கள் ஒதுக்கி, தேவனைப்பற்றியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் பூமியிலே வரப்போகும் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றியும், நடக்கப் போகும் எல்லாவற்றிற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அறிந்து கொள்ள நீயே அதை வாசிக்கலாம்.

பூமியும் அதிலுள்ளவர்களும் கணக்கு ஒப்புவிக்கும்படி அழைக்கப் படுவார்கள். அவர்களில் அநேகர் அழிக்கப்படுவார்கள். தேவனின் மாபெரும் திட்டத்திற்கு எதிரான அவர்களின் கலகமும் முரட்டாட்டமே அதற்கான காரணம். 1900 ஆண்டுகளுக்கு முன் கீழ்க்கண்ட வார்த்தைகள் எழுதப்பட்டவையானாலும், அவை எத்தனைச் சரியாகப் பொருந்துகின்றன என்பதைக் கவனியுங்கள்.

*''உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீரசத்தங்கள் வானத்தில் உண்டாயின.... ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் முண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும் தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும் பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும் காலம் வந்தது.'' என்று சொல்ல தேவனைத் தொழுதுகொண்டார்கள். (வெளிப்படுத்தல் 11:15-18)*

ஆனால் தேவனுடைய ஆளுகையைத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டவர்கள் யாவரும், அவருடைய வழிகளின்படி வாழக் கற்றுக் கொள்கிறவர்களும் இதைவிடச் சிறப்பான உலகில் சிறப்பான காலங்களை எதிப்பார்க்கலாம்.

# வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய வேதாகமப் போதனை

“நான் இளவயதாயிருந்தபோது, வேலை செய்தது போல இப்பொழுது என்னால் செய்ய முடிகிறதில்லை.'' எத்தனை தடவை இந்த வார்த்தைகளைக் கேட்டிருக்கிறோம். அது எவ்வளவு உண்மையுங் கூட! நம் சக்தியெல்லாம் குறைந்து போவதைக்காண நமக்கு 70வயதாக வேண்டுமென்பதில்லை.

மத்திய வயது காலத்தில் கூட, நாம் இளமையாயிருந்த போது நடந்த வேகத்தில் நடக்க முடிவதில்லை.

வயது முதிர்வதிலேயே நம் வாழ்க்கையைக் கழிக்கிறோம். ஒரு நாளில் நாம் மரித்துவிடுவோம் என்பதும் நாம் சற்றேசிந்தித்தால் நமக்குத் திட்டமாய்த் தெரியும்.

*“எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்” (சங்கீதம் 90:10)* சங்கீதக்காரனின் இந்த வார்த்தைகள் உண்மையானவை.

மனிதர் யாவருமே சாகிறவர்கள். வாழ்க்கையில் கட்டாயம் நிகழும் என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு காரியம் என்னவெனில், நாம் ஒரு நாளில் மரித்துவிடுவோம்.

### பூமியில் வாழ்ந்த முதல் மனிதன்

நாமெல்லாரும் ஏன் முதிர்வயதாகிப் பின்னர் இறந்துவிடுகிறோம்? இதற்கான பதிலைக் காண, வேதபுத்தகத்தின் முதல் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள ஆணையும் பெண்ணையும் பற்றி வாசிக்க வேண்டும். மக்கள் வாழ்வதற்கு ஏற்றமிக அழகான தொரு உலகை தேவன் உண்டாக்கினார். தாவரங்களையும் மிருகங்களையும் முதலாவதாகப் படைத்த தேவன், எல்லாம் ஆயத்தமான பின் ஒரு மனிதனை உண்டாக்கினார்.

*“தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்”* என ஆதியாகமம் 2:7 கூறுகிறது.

ஆச்சரியமான திறமையினாலே ஒரு மனித உடல் உருவாக்கப்பட்டது.

உயிரற்ற அந்த சடலம் தரையிலே கிடந்ததை நாம் மனக்கண்ணினால் காண முடியும். அதன்பின் என்ன?

தேவன் *''ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமாவானான்” (ஆதியாகமம் 2:7).*

மனிதன் சுவாசிக்கத் தொடங்கினான். அவன் உயிருள்ளவன் ஆனான். அவனால் பார்க்கவும், கேட்கவும், சிந்திக்கவும் உணரவும் முடிந்தது. மெய்யாகவே, தேவன் படைத்த எல்லாவற்றைக் காட்டிலும் மிக ஆச்சரியமான படைப்பு மனிதன் தான்.

### ஆதாமின் தனிமை



*“தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலேவைத்தார்'' (ஆதியாகமம் 2:8).*

ஆதாம் - ஆம், அது தான் தேவன் மனிதனுக்குக் கொடுத்த பெயர் - தோட்டத்தைப் பராமரித்தான். “நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின்” கனியைத் தவிர மற்ற எந்த மரத்தின் கனியையும் விருப்பம் போலப் புசிக்கலாம் என தேவன் ஆதாமிடம் கூறினார். அதோடு *“அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்,”* என அவனை எச்சரிக்கவும் செய்தார். (ஆதியாகமம் 2:17).

ஆதாமுக்குத் துணையாக மிருகங்கள் தாம் இருந்தன. அவன் சிந்திக்கும் விதமாக அவைகளால் சிந்திக்க முடியவில்லை. அவன் தனிமையை உணர

ஆரம்பித்தான். *"பின்பு தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனியாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்றான். (ஆதியாகமம் 2:18)*

வசனம் 21-23 ல் தேவன் எவ்விதம் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதை ஆதாமோடு கூட இருந்து அவன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு மனுஷியை உருவாக்கினார் என நீங்கள் வாசிக்கலாம்.

### ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கற்பனையை மீறுகிறார்கள்.

ஆதியாகமம் 3:1-13ல் முதலாம் மனுஷயாகிய ஏவாள் எவ்விதம் சர்ப்பத்திற்குச் செவிகொடுத்து (சர்ப்பத்தின் பேச்சைக் கேட்டு தேவனுடைய கட்டளைக்கு மீறி நடந்தாள் என்பதையும் ஆதாம் தேவனுக்கு எப்படிக் கீழ்ப்படியாமற் போனான் என்றும் வாசிக்கலாம்.)

தேவனுடைய கற்பனையை மீறியதால் அவர்கள் பாவம் செய்தார்கள். நாம் ஏற்கனவே பார்த்தபடி பாவத்தின் சம்பளம் மரணம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அது தெரிந்தது தான் ஏனென்றால், "அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்," என்று தேவன் சொல்லியிருந்தார்.

### தண்டனை

இந்தக் கஷ்டத்திற்கான காரணத்தில் சர்ப்பத்தின் பங்கு அது தண்டிக்கப்பட்டது. ஆதாமும் ஏவாளும் மரணதண்டனை பெற்றதோடு, தோட்டத்தை விட்டு விரட்டப்பட்டார்கள்.



அதற்குப் பிறகும் ஆதாமும் ஏவாளும் அதிக காலம் வாழ்ந்தார்களெனினும் அவர்கள் நம்மைப் போலவே மரிக்கும் சிருஷ்டிகளானார்கள். நம்மைப் போலவே களைப்படைந்து வியாதிப்பட்டார்கள் கடைசியில் முதிர்வயதாகி மரிக்கவேண்டியதாயிற்று. தேவனுடைய வார்த்தைகள் நிச்சயமும் உறுதியுமானவைகள். *''நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்." 3:19.*

''தேவன் எவ்விதம் ஆதாமை



உருவாக்கி ''ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனிதன் ஜீவாத்துமாவானான்," என்பது உங்களுக்கு நினைவிருக்கும்." (ஆதியாகமம் 2:7). மனிதர்கள் யாவருமே 'ஜீவாத்துமாக்கள்.' ஆனால் அவர்கள் சுவாசிப்பதை நிறுத்திவிட்டால், அவர்கள் ஜீவன் போய் விடுகிறது - அவர்கள் "செத்த ஆத்துமாக்களா"கிறார்கள்.

பிரசங்கி 5:6ல் சொல்லப்பட்டிருப்பதுபோல *"உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறியார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும் அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று, சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை."*

அல்லது சங்கீதம் 146:3,4 வசனங்கள் கூறுவது போல,

''பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவிபிரியும், அவன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்."

### உலகில் பாவமும் மரணமும்

இது எவ்வாறு நம்மைப் பாதிக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள பவுல் அப்போஸ்தலன் நமக்கு உதவுகிறார். *"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது." (ரோமர் 5:12).*

### கருத்துச் சுருக்கம்

1. தேவன் ஆதாமை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்.
2. அவனுடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதியதன் மூலம் அவனை உயிரோடிருக்கச் செய்தார்.
3. தேவன் ஆதாமுக்கு ஒரு கட்டளை கொடுத்தார். இந்தக் கட்டளையை அவன் மீறினால், தண்டனை மரணம் தான் என அவனிடம் கூறினார்.
4. ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள். அவர்கள் மரிக்கும் படைப்புகளானார்கள்.
5. மனிதர் யாவரும் ஆதாமின் வழித்தோன்றல்கள். எல்லாருமே பாவிகள், ஆகவே எல்லாரும் மரிக்கிறார்கள்.
6. நாம் பார்க்கபோகிறதன்படி, கிறிஸ்து மக்களுக்கு ஜீவனைக் குறித்த நம்பிக்கையைக் கொண்டுவந்தார்.

## நம்மையே நேசிப்பது

யோனாத்தான் தாவீதின் மேல் கொண்டிருந்த மகத்தான அன்பைப் பற்றி வேதாகமம் இவ்வாறு கூறுகிறது.

''யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடு ஒன்றாய் இசைந்திருந்தது. யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான். (1 சாமுவேல் 18:1) நாமெல்லாரும் நம் உயிரை அல்லது சுயத்தை நேசிக்கிறோம். எபேசியர் 5:29ல் பவுல் கூறுவதாவது:

"தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல் ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்."

நாம் நம்மை கவனித்தவர்களாய் உணவும் நீரும் நமக்குக் கிடைக்கும்படியாய்ப் பார்த்துக் கொள்ளாவிடில் நாம் சீக்கிரமே மரித்துவிடுவோம்.

## சர்ப்பத்தின் பொய்

ஆனால் நம்மில் அநேகர் நம்மை அளவுக்கு மீறி நேசிக்கிறோம். ஆம், நாம் நம்மைப் பற்றிப் பெரிதாக நினைத்துக்கொள்கிறோம். இதனால் தானோ என்னவோ, விலங்குகளைப் போலவே, தாங்களும் செத்து அழிந்து போவார்கள் என்று நம்புவது மனிதர்க்குக் கடினமாயிருக்கிறது. மரணத்திற்குப் பின்னும் எங்கோ ஒரு இடத்தில் தொடர்ந்து வாழப் போவதாக நினைப்பதையே அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். சர்ப்பம், ஆதாம், ஏவாளிடம், ''நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி 3:4) என்றது. இது ஒரு பொய். இருப்பினும், தேவன் ஏற்கனவே கூறியிருந்ததைக் காட்டிலும் இந்தப் பொய்யை நம்புவதையே ஏவாள் தெரிந்துகொண்டாள். மனிதரும்





சர்ப்பத்தின் பொய்யை நம்புவதையே எப்போதும் தெரிந்து கொண்டவர்களாய், ''நீ மண்ணாயிருக்கிறாய். மண்ணுக்கே திரும்புவாய்'' என்ற தேவனின் வார்த்தைளை சுவாசிப்பதைக் காட்டிலுமமம், சர்ப்பத்தின் பொய்யை நம்புவதைத் தெரிந்து கொண்டு, மரணத்தின் போது நடப்பது குறித்துப் பலவிதமான கட்டுக்கதைகளைப் புனைகிறார்கள்

## சாகிற மிருகங்களைப் போலவே

ஆயினும் வேதாகப் போதனை தெளிவாயுள்ளது. பிரசங்கி 3:19ஐ எடுத்து வாசியுங்கள். "மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும். இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே. மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல. செத்துப்போன ஒரு மிருகத்தைப் பார்க்கும் போது, அந்த விலங்கின் மிக முக்கியமான பாகம் லோகங்களில் வசிக்கப் போய்விட்டதாகக் கற்பனை செய்யமாட்டீர்கள். உயிரோடிருந்து, சுவாசித்து, நடமாடிய (நகர்ந்த) அந்த மிருகம் எவ்வளவு தான் அழகாயிருந்தாலும் இப்பொழுது அது ஒரு செத்த சரீரம். மனிதர்களும் அதே மாதிரிதான். சாவின் போது அங்கு விடப்படுவதெல்லாம் ஒரு உயிரற்ற சடலம் தான். சங்கீதம் 49:12ஐக் கவனித்தீர்களா?





*"ஆகிலும் கனம் பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை; அழிந்து போகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்"*

மிருகங்களுக்கு ஒப்பாயிருத்தலா? ஆம், சங்கீதக்காரன் எந்த சந்தேகத்திற்கும் இடம் வைக்கவில்லை. 14ம் சங்கீதத்தில் இப்படித் தொடர்ந்து எழுதுகிறார். "ஆட்டு மந்தையைப் போலப் பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்".

## ஒரு தவறான கருத்து

நாம் சாகும்போது, நம்மிலுள்ள ஏதோ ஒரு உயிர்ப்பொறி தொடர்ந்து ஜீவித்துக்கொண்டேயிருக்கிறது என அநேகர் நம்புகிறார்கள். மனிதனுக்கு 'நித்திய அழியாத' ஆத்துமா இருப்பதாகவும் மோட்சத்தில் அது என்றென்றுமாய் வாழும் எனவும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஆத்துமாக்கள் 'சாவாமை' உள்ளவை

அல்ல எசேக்கியல் தீர்க்கதரிசி மூலமாகக் கடவுள் பேசுகிறார்.

“இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்” (எசேக்கியேல் 18:3).

மரணத்தைப்பற்றி வேதாகமம் பேசும்போது கூறும் அர்த்தத்தை நாம் காண்கிறோம். ஜீவன் முற்றிலுமாக மடிந்து போகிறது. ஆகவே சரீரமும் மனதும் அழிந்து மண்ணுக்குத் திரும்புகிறது.

### ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று

ஒருவேளை நீங்கள் வேதாகமத்தை மூடி வைத்துவிட்டு, இந்தத் தாளையும் தூர எறிந்து விடலாம் என நினைப்பீர்கள். ஆனால் கொஞ்சம் பொறுங்கள். வேதாகமம் என்பது தேவனுடைய வார்த்தை. அது கூறுவது சத்தியம். சத்தியம் ரொம்ப இனிமையாக இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, நாம் சத்தியத்தை விசுவாசிக்க மறுத்தால், அது பெரிய முட்டாள்தனம் தான்.

மரணத்தின் நிஜத்தன்மையைப் போதிக்கிற அதே வேதாகமம், கல்லறைக்கு அப்பால் ஒரு நம்பிக்கை இருக்கிறது. உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருக்கிறது எனவும் கூறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீர உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனுக்குள் மீண்டும் வந்தார். ஒரு நாள் வரும், அப்போது கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள், அவரைப் போலவே வெளியே கொண்டுவரப்படுவார்கள்.

ஆனால் அது தனியே இன்னொரு பாடம்.

### கருத்து சுருக்கம்

1. மிருகங்களைப் போலவே மனிதர்களும் மரணத்தின் போது அழிந்து போகிறார்கள் என வேதம் போதிக்கிறது.
2. மோட்சத்திற்குப் போவதைப் பற்றி வேதாகமம் எந்த நம்பிக்கையும் கொடுக்கவில்லை.
3. இயேசுவானவர் திரும்ப பூமிக்கு வரும்போது, அவர் மீது விசுவாசம் உள்ளவர்களை மீண்டும் உயிர்பெறச் செய்வார்.

### நரகம் - அது எங்கிருக்கிறது ?

‘‘வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்’’ (சங்கீதம் 115:16).

மோட்சம் தேவன் வாசம் பண்ணும் இடம் என்பதை நாம் அறிவோம். பூமியை மனுஷர் வாசம் பண்ணும் இடமாக தேவன் படைத்தார் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் நரகத்தைப் பற்றி என்ன ? அது எங்கு இருக்கிறது ? யார் அங்கு வாழ்கிறார்கள்.





ஒரு மனிதன் செத்தபின் மண்ணுக்குத் திரும்புகிறான் என நாம் ஏற்கனவே பார்த்தோம். இனிமேல் அவன் சிந்திக்கவோ, உணரவோ முடியாது. உன் விரல்களுக்கிடையே நீ நசுக்கின பூச்சியைப் போலவே அவனுக்கும் இனி உயிர் இல்லை.

துன்மார்க்கர் மரித்தபின் தண்டனை தரும் இடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்; அந்த இடம் ‘நரகம்’ என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் வேதாகமம் என்ன சொல்கிறது என்பதைக் காண்போம். பழைய ஏற்பாடு முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டுப் பின்னர் பிறமொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. ‘ஷியோல்’ என்ற எபிரேய வார்த்தையின் பொருள் ‘மூடப்பட்ட ஒரு இடம்’. அந்த வார்த்தைதான் 31 இடங்களில் நரகம் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூடப்பட்ட இடம் எனப்பட்டது கல்லறை. மொழி பெயர்ப்பாளர்களும் 31 தடவை ‘ஷியோல்’ என்ற பதத்திற்குக் ‘கல்லறை’ என்றே மொழியாக்கம் செய்துள்ளார்கள் என்பது கவனிப்புக்குரிய விஷயம். நரகம் என்பதும் கல்லறை என்பதும் ஒரே இடம் தான்.

### ஹேடிஸ்

பழைய ஏற்பாடு முதன் முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது போலவே, புதிய ஏற்பாடு முதன்முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. நரகத்திற்குச் சரியான ஒரு கிரேக்க வார்த்தை ‘ஹேடிஸ்’. ‘ஷியோலுக்கு’ என்ன அர்த்தமோ, அதே தான் ‘ஹேடிஸ்’சுக்கும்: இயேசுவைக் குறித்து இப்படி வாசிக்கிறோம் “என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விட்டீர்” (அப்போஸ்தலர் 2:27).

இயேசு நரகம் எனப்படும் ஹேடிஸ்க்குச் சென்றார். வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் - கல்லறை. ஆனால் அவர் அங்கேயே விட்டு விடப்படவில்லை. அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார்.

## ஆனால் நரக அக்கினி பற்றி என்ன ?

“உன் கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும்,



ஊனமாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்'' (மாற்கு 9:43).

இத்தகைய வசனமொன்றில் ‘நரகம்’ என்பதற்கு ‘கெஹன்னா’ என்ற இன்னொரு கிரேக்க வார்த்தை உள்ளது.

‘கெஹன்னா’ என்பது எருசலேமுக்கு சற்று வெளியே உள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயர். இயேசுவின் உரைகளைக் கேட்ட யூதர்களுக்கு நன்கு பரிச்சயமான ஒரு இடமாகும். அங்கு தான் நகரத்தின் குப்பைகள் எரிக்கப்பட்டன. முற்றுகை மற்றும் போர்க்காலங்களில் இறந்தவர்களின் உடல்கள் கெஹன்னாவி எரியூட்டப்பருவதற்காக வீசி எறியப்பட்டன. அது அழிவுக்கான இடம். ஆகவே கெஹன்னாவில் எறியப்படுவது என்றால், முற்றிலும் அழிப்பது என்று பொருள். தேவனை விட்டு விலக நடத்தக்கூடிய காரியங்களை மனிதர் தங்கள் வாழ்க்கையினின்று வெட்டி விடுவதன் மூலம் நித்திய மரணமாகிய முழுமையான அழிவைத் தவிர்க்கும்படி இயேசு மக்களை எச்சரித்தார்.

‘உயிர்த்தெழுதல்’ என்றால் மீண்டும் ஜீவன் பெறுதல். மூன்று நாள் மரித்தவராயிருந்து, இயேசு கிறிஸ்து கல்லறையினின்று வெளி வந்ததுதான் உலக வரலாற்றிலேயே மகா ஆச்சரியமான நிகழ்ச்சியாக இருந்திருக்கவேண்டும். அவருடைய சீஷர்கள் அவரைக் கண்டபோது, அவர்கள் கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை. அது ஒரு ஆவி என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால் இயேசு அவர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்.

“நான் தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி,



தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்: புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார்” (லூக்கா 24:39-43).

கடைசியில், அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்பது அவர்களுக்கு உறுதியாயிற்று. தேவன் அவருக்கு நித்திய ஜீவனை அளித்துவிட்டார். “இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிக்கிறேன்” என இயேசு சொல்வதை வெளிப்படுத்தல் 1:18ல் வாசிக்கிறோம்.

## இயேசு, தம்மைப் பின்பற்றுவோரை உயிரோடெழுப்புவார்

இயேசு தம் சீஷர்களும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார்கள் என்று சீஷர்களுக்குப் போதித்தார். இப்பொழுது தான் மேற்கோள் காட்டிய வசனத்தை மீண்டும் பாருங்கள். “மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்” (வெளி 1:18)

ஒரு கதவிற்கான சாவி உன்னிடம் உள்ளதென்றால் உன்னால் அதைத் திறக்க முடியும் என்பது அதன் பொருள். கல்லறையின் சாவிகள் (திறவுகோல்கள்) இயேசுவிடம் இருக்கின்றன. அவருக்குக் கல்லறைகளைத் திறந்து அங்கு அடக்கம் செய்யப்பட்டவர்களை விடுவிக்கும் வல்லமை உண்டு என இதே கருத்தைத் தெளிவாகக் கூறலாம்.

இந்த வல்லமை தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. யோவான் 5:20-29 வசனங்களை வாசியுங்கள். வ.வ. “பிதாவாகிய தேவன் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்”.

உயிர்ப்பித்தல் என்றால் ஜீவனுக்குள் கொண்டுவருதல், ஆண்களையும் பெண்களையும் மறுபடியும் ஜீவனுள்ள வாழ்க்கைக்குள் கொண்டுவரும் வல்லமையை தேவன் இயேசுவுக்குக் கொடுத்திருக்கிறார்.

## உண்மையும் உத்தமமுள்ள மக்களனைவருக்கும் உள்ள பொதுவான நம்பிக்கை

காலங்காலமாய் தேவனுடைய மக்கள் தங்கள் உயிரோடு எழுப்பப்படும் நாளை எதிர்நோக்கியவர்களாய் மரித்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றிப் பவுல், “தூரத்திலே அவைகளைக் (வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்கள்) கண்டு, நம்பி, விசுவாசத்தோடே மரித்தார்கள்'' (எபிரெயர் 11:13) என்கிறார். மேலும் ‘‘இவர்களெல்லாரும்...... வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்

போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:39-40). இந்த வசனங்களில் நாம் காண்கிறது என்னவென்றால், தேவனை உண்மையாய்த் தொழுதுகொள்பவர்கள் யாவருக்கும் நித்திய ஜீவன் ஒரே சமயத்தில் கொடுக்கப்படும் என்னும் உண்மை.

ஆதிக் கிறிஸ்தவர்களும் இந்த சமயத்திற்காக எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் இறந்து போனால், 'நித்திரைதான்' என்று அவரைக் குறித்துப் பேசினார்கள். தூங்கி முடித்தபின் மக்கள் விழித்தெழும்புவது போல, சீஷனும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவான். 1 கொரிந்தியர் 15:6ல் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவரைக் கண்ட 500 சீஷர்களில் "சிலர் மாத்திரம் நித்திரையடைந்திருக்கிறார்கள்" எனப் பவுல் கூறுகிறார்.

உயிர்த்தெழுதல் எப்போது நடக்கும்?

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின் ஏறத்தாழ 2000 ஆண்டுகள் கடந்து போயின. 'விசுவாசத்தில் மரித்தவர்களை' அவர் எப்போது எழுப்பப் போகிறார்? இந்தக் கேள்விக்குப் பவுல் அப்போஸ்தலன் பதிலளிக்கிறார்.

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரைசியிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரிந்தியர் 22:23).

தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் முழு பூமியையும் ஆளவும் இயேசு கிறிஸ்து திரும்ப வருகிறார் என்று நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். அப்படி அவர் வரும்போது, அவர் மரித்தோரை எழுப்புவார். அப்பொழுது உண்மையும் உத்தமமுமாயிருந்தவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும். அவர்கள் பூமியை இயேசு ஆள்வதற்கு உதவி செய்யும் சிலாக்கியத்தை அனுபவிப்பார்கள். இதை நாம் வெளிப்படுத்தல் 5:9-10ல் வாசிக்கிறோம். அந்த நாளில் அவர்கள் பாடப்போகும் பாட்டின் வார்த்தைகளை வாசிக்கிறோம்.

"...........நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரர்களிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்".

இயேசு வரும்போது சிலர் உயிரோடிருப்பார்கள்

இயேசு திரும்ப வரும்போது இன்னும் உயிரோடிருப்பவர்கள் பற்றி என்ன?



இயேசு வரும்போது, "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை வானத்தில் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" என இயேசு பகர்ந்தார். (மத்தேயு 24:31)

பவுல் இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் அதிகமாகவே கூறுகிறார்.

"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது : கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்ோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்வுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்" (1 தெசலோனிக்கேயர் 4:14-17)

1 கொரிந்தியர் 15:51-58ஐயும் வாசியுங்கள். இங்கே உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் நித்திய ஜீவன் - அல்லது இங்கே அவர் கூறுகிறபடியே அழியாமை எனும் மகத்தான ஈவைப் பெற்றுக்கொள்வார்கள் என அப்போஸ்தலன் கூறுகிறார்.

அந்த நாளுக்காக எதிர்ப்பார்த்திருக்கிற நாம் "உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாக" இருக்கவேண்டுமென பவுல் கூறுகிறார்.

**நினைவில் கொள்ள சில குறிப்புகள் :**

1. மரித்தோரை உயிரோடெழுப்பும் வல்லமையை தேவன் இயேசுவுக்குக் கொடுத்திருக்கிறார்.
2. அவர் திரும்ப பூமிக்கு வரும்போது அதைச் செய்வார்.
3. அதே சமயம் கிறிஸ்வுக்குள்ளிருக்கும் உயிரோடியிருப்பவர்களை, அவர் வரும்போது, ஒன்றாகக் கூட்டி சேர்ப்பார்.
4. உண்மையும் உத்தமமுமாய் இருந்தவர்களுக்கு அவர் நித்திய ஜீவனை அளிப்பார். அவர்கள் வாழ்ந்து அவரோடு அரசாளுவார்கள்.

# இப்பொழுதே செய்



நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை ஒரே ஒரு வாழ்க்கை. ஆகையால், நாம் யார்மேலாவது அன்பு காட்டவேண்டுமானால் யாருக்காவது நன்மை செய்யவேண்டுமானால், நம்மோடு இருப்பவர்க்கு நன்மை செய்யவேண்டுமானால் அவற்றை இன்றே, இப்போதே செய்வோம். அவற்றை அசட்டை பண்ணாமலும், தள்ளிபோடாமலும், இப்போதே செய்வோம் ஏனெனில், நாம் மறுபடியும் இந்த வாழ்க்கைக்குள் கலந்து வருவதில்லை. என 'பென்' என்பவர் கூறியுள்ளார்.

இன்றே அதை செய்வாயாக. சுகவீனமாய் இருந்த ஒருவருக்கு 'சீக்கிரம் குணமாக ஆசிக்கிறேன்'. என்ற வாழ்த்துதல் அட்டையை அனுப்ப மறந்து, பிறகு அவர் இறந்து போன செய்தி கேட்டு துக்கித்திருக்கிறோமல்லவா? நன்மை செய்ய தகுதியான நேரம் இப்போதே என்று ஒருநாள் எப்போதாகிலும் நாம் நல்ல காரியம் செய்யவேணும் என்று காத்திருப்போருக்கு அந்த நாள் வராமலே போகும். எதையுமே செய்ய முடியாது. என "சாமுவேல் ஜான்சன்" கூறுகிறார். ஒரு கலசம் தண்ணீர் ஒரு பெரிய காரியமே அல்ல. ஆனால் இயேசு அதைக்குறித்து *"அதன் பலனை அடையாமற் போவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்கு சொல்கிறேன்"* என்று கூறினார்.

நாம் நன்மை செய்ய தகுதியான நேரம் இப்போது / இப்போதே ஒரு பகட்டான / நல்ல நாளுக்காக காத்திருக்க வேண்டாம். அனுதினமும் நாம் செய்கின்ற சிறிய சிறிய நல்ல காரியங்களும் தேவனைப் பிரியப் படுத்துகின்றவைகளாகும். தரித்தருக்கு உணவையும், உடையும் தந்து, அவர்கள் வியாதியின் நேரத்தில் அவர்களை கண்டு விசாரிப்பதைக் குறித்து இயேசு பாராட்டி சொல்லியிருக்கிறார். *"இந்த சிரியரில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்கிறீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்"* என்று இயேசு கூறியுள்ளார். துன்ப நேரத்திலும் வியாதி நேரங்களிலும் விதவைகளையும் தகப்பனை இழந்தவர்கள் அனாதைகளும் சந்தித்து, அவர்களை விசாரித்து இந்த உலகத்தில் தங்களை கறைதிறையற்றவர்களாக காத்துக் கொள்வதே தகுந்த தேவபக்தி நல்ல வழிபாடு பக்தி என்று "யாக்கோபு" தம் நிரூபத்தில் கூறியுள்ளார்.



நாம் கர்த்தருக்கு ஒரே ஒரு நல்ல காரியம் செய்வோமென நினைத்தால் அது அவருடைய பிள்ளைகளுக்கு நாம் காட்டும் அன்புதான். நாம் நம் சகோதரரை நேசிக்காவிடில் தேவன் பேரில் எப்படி அன்பாய் இருக்கமுடியும்? *"தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனை பகைத்தால், அவன் பொய்யான தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்"* என்று யோவான் எழுதியிருக்கிறார்.

விசுவாசத்தைப் போல் அன்பும் கிரியைகளினாலே வெளிப்படுத்தப்படுகின்றன. நாம் அசட்டை பண்ணுகிற ஒருவரை நாம் நேசிக்கிறோம் என்பது சரியானதல்ல. "யாக்கோபு" தம்முடைய நிரூபத்திலே இப்படியாய் எழுதுகிறார். உபத்திரவத்தில் இருக்கிறவரைப் பார்த்து, "நீங்கள் சமாதானத்தோடே போங்கள். குளிர் காய்ந்து பசியாருங்கள். என்று சொல்லியும் சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குச் கொடாமல், பிரயோஜனமென்ன?" என்று சொல்லுகிறார். உண்மையான அன்பு மற்றவர்களுக்கு உதவி செய்வதும், போஷிப்பதுமானதுமாக இருக்கும், அவர்களுக்கு அதைப்பற்றி பேசக் கூடநேரம் இருக்காது.

நேர்த்தியாய் பேசுகிறவன் முக்கியமல்ல, நேர்த்தியாய் செய்கிறவனே முக்கியம். *"வார்த்தைகளைக் காட்டிலும் செயல் முக்கியம்"* என்ற பழைய கூற்று உண்டு. தேவாலயத்தில் "இரண்டு காசு" போட்ட விதவையே பரிசேயரைக் காட்டிலும் (தம்பட்டம் அடித்து பேசி காலங்கழித்த பரிசேயரைக் காட்டிலும்) மேலானவள். இயேசுவின் பாதங்களை பரிமளதைலம் பூசி, முத்தமிட்டு, தம் தலைமயிரால் துடைத்து கொண்டிருந்த மரியாளைப்பற்றி, பேசும்போது. இயேசு பாவிகள் தம்மை தொடும்படி அனுமதித்தார் என சீமோன் தாழ்வாக நினைத்து பேசினான்.

மரியாளும் அந்த விதவையும் அதிகமாக ஒன்றும் செய்யாவிட்டாலும் தங்களால் இயன்றதை செய்தனர். அவளுக்கிருந்த எல்லாவற்றையும் போட்டுவிட்டாள். மரியாளும் தம்முடைய செய்கையினால் அவளின் அன்பை வெளிப்படுத்தினாள். அவர்களால் முடிந்ததை அவர்கள் செய்தனர். நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க சில காரியங்களை நாம் நம்மிடையே கேட்டுப் பார்ப்போம். நாம் பெரிய சந்தர்ப்பத்திற்காக, சிறிய சிறிய காரியங்களை தள்ளிப் போடுகிறோமா? பெரிய தொகை கிடைக்குமென சிறிய தொகையை கொடுக்காமல் இருக்கிறோமா? ஒரேயடியாக பெரிய நல்ல செயல் செய்யவேண்டும் என, ஒன்றுமே செய்யாமல் இருக்கிறோமா?

பிறகு செய்யலாம் என்பதைக்காட்டிலும், இன்றே இப்போதே செயல்படுவோம். எப்படியும், நாம் மறுபடியும் இந்த வாழ்க்கைப் பாதையில் இந்த நாளை காணமுடியாது. நாம் நன்மை செய்ய இருந்தாலும், அன்பு காட்ட இரக்கம் காட்ட வேண்டுமாயிருந்தாலும், நம்மால் செய்ய முடிந்ததை இப்போதே செய்வோம்.